**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV of BNSS)

**C.C. No. 33/2026**

Deposition of LW 10 Additional witness Examined as : PW 3

| | | | |
|---|---|---|---|
| Name : | அகோரமூர்த்தி | Defence | : |
| Father Name : | சுப்ரமணியன் | Court | : |
| Village : | சிறப்பு உதவி ஆய்வாளர், பெரம்பூர் காவல் நிலையம் | Taluk | : |
| Calling : | | | |
| Age : | 56/2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act Bharathiya Shakshiya Adhiniyam the day 06.03.2026

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரி ஆஜர்.

<u>**முதல் விசாரணை**</u>

1. நான் தற்போது பெரம்பூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளாராக பணிபுரிந்து வருகிறேன். என்னோடு பணிபுரிந்த வகையில் சிறப்பு உதவி ஆய்வாளர் ராஜகோபால், உதவி ஆய்வாளர்கள் ராஜேந்திரன் மற்றும் ஜெய்சங்கர் ஆகியோர்களின் கையொப்பம் எனக்கு நன்கு தெரியும். இந்த வழக்கின் சாட்சிகள் சமாதானம் ஆகிவிட்டபடியாலும், அரசு தரப்பு வழக்கிற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதாலும், ஆவணங்களின் அடிப்படையில் தான் நான் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 19.02.2023ஆம் தேதி 17.00 மணிக்கு பெரம்பூர் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் ராஜகோபால் அவர்கள் நிலைய அலுவலில் இருந்தபோது தமிழ்வாணி க/பெ. சுந்தரேசன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று காவல் நிலைய குற்ற எண். 68/2023, இதச பிரிவுகள் 294(b), 448, 323, 354, 506(i) ஆகிய சட்டப்பிரிவுகளின் கீழ் வழக்கினை பதிவுசெய்தார். **அந்த புகார் மனு அ.சா.ஆ.2 ஆக குறியீடு**

**செய்யப்படுகிறது. முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. மேற்படி வழக்கு கோப்புகளை மேல்விசாரணை செய்யும் பொருட்டு உதவி ஆய்வாளர் ராஜேந்திரன் அவர்களின் பார்வைக்கு வைக்கப்பட்டு அவர் வழக்கினை மேல் விசாரணை எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் கலியபெருமாள் மற்றும் மதன் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார். **பார்வை மகசர் அ.சா.ஆ.4ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

3. பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலானவர்களை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவுசெய்தார். பட்டியல் சாட்சிகளை விசாரணை செய்ததில் எதிரி குற்ற சம்பவம் புரிந்தது உண்மை என்று தெரிய வந்த நிலையில் எதிரியை தேடியபோது எதிரியை கொடவிளாகம் காலனி தெரு இந்திரா நகர் தனது வீட்டு வாசலில் நின்றுகொண்டிருந்த எதிரி மணிகண்டன் என்பவரை காலை 08.00 மணிக்கு குற்ற காரணம் கூறி கைது செய்தும் 08.30 மணிக்கு நிலையம் வந்து எதிரியை நீதிமன்ற பாரா வசம் ஒப்படைக்கப்பட்டார்கள்.

4. அசா1க்கு வெளியாங்கள் எதுவும் இல்லாததாலும் அவர் மருத்துவ சிகிச்சைக்கு செல்லாததாலும் இவ்வழக்கின் சட்டப்பிரிவுகான இதச பிரிவுகள் 294(b), 448, 323, 354, 506(i) ல் இருந்து இதச பிரிவுகள் 294(b), 448, 354, 506(i), 352 ஆக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாற்று அறிக்கை தயார் செய்தார். அந்த **சட்டப்பிரிவு மாற்று அறிக்கை அசாஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

5. பின்னர் வழக்கின் எதிரிகளின் மீதான விசாரணையை முடித்து 28.02.2023, இதச பிரிவுகள் 294(b), 448, 354, 506(i), 352 ன் கீழ் இறுதி அறிக்கையை தாக்கல் செய்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

இந்த வழக்கின் நேரடி விசாரணை அதிகாரி நான் இல்லை என்றால் சரிதான். ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால்

சரிதான். இந்த வழக்கின் விசாரணை அதிகாரி சம்பவ இடத்திற்கு செல்லாமல் சம்பவ சாட்சிகளை விசாரிக்காமல் எதிரியின் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**